செய்தி வெளியீடு எண்:50 நாள்:14.01.2008

# செய்தி வெளியீடு

## 112 கோடி ரூபாய் செலவில் 5 இலட்சத்து 22 ஆயிரம் மாணவ மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் விழா!

## 2 கோடியே 22 இலட்ச ரூபாய் கடனுதவியில் 209 சிறுபான்மைச் சமுதாய இளைஞர்களுக்கு ஆட்டோக்கள் வழங்கும் விழா!

## முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இலவச மிதிவண்டிகளையும், ஆட்டோக்களையும் வழங்கினார்!

தமிழகத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள், அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள், பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றில் 11 ஆம் வகுப்பில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர், ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு நடப்பாண்டில் (2007–2008) இலவச மிதி வண்டிகள் வழங்குதல் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பள்ளிக் கல்வித் துறை ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் மிதிவண்டிகள் அனைத்தும் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்ட விதிகளைப் பின்பற்றிக் கொள்முதல் செய்யப் பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் 112 கோடி ரூபாய் செலவில் 2 இலட்சத்து 38 ஆயிரத்து 502 மாணவியரும், 2 இலட்சத்து 84 ஆயிரத்து 297 மாணவர்களும் ஆக மொத்தம் 5 இலட்சத்து 22 ஆயிரத்து 799 மாணவ, மாணவியர் இத்திட்டத்தில் பயனடைவர். இவர்களில் 2 இலட்சத்து 22 ஆயிரத்து 562 பேர் பிற்படுத்தப்பட்டோர்; ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 924 பேர் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர்; ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 174 பேர் ஆதி திராவிடர்/ பழங்குடியினர்; 12 ஆயிரத்து 139 பேர் இதர வகுப்பினர் ஆவர்;

**தமிழகம் முழுவதிலுமுள்ள 2851 பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் பயிலும் இம்மாணவ, மாணவியர் அனைவருக்கும் வரும் பிப்ரவரி இறுதிக்குள் மிதிவண்டிகள் அனைத்தும் வழங்கிட ஆவன செய்யப்பட்டுள்ளது.**

**முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாணவ மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் பணிகளை இன்று (14.1.2008) தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.**

**மேலும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மதுரை, சிவகங்கை, கோவை ஆகிய மாவட்டங்களில் உள்ள சிறுபான்மைச் சமுதாயங்களைச் சேர்ந்த 209 இளைஞர்களுக்குக் குறைந்த வட்டியுடன் கூடிய 2 கோடியே 21 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் கடனுதவியில் ஆட்டோக்கள் வழங்கும் பணிகளையும் இன்று (14.1.2008) முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்.**

**இந்நிகழ்வின்போது, மின்துறை அமைச்சர் திரு.ஆற்காடு என்.வீராசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி ஆ. தமிழரசி, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் அருள்தந்தை சேவியர் அருள்ராஜ், தலைமைச் செயலாளர் திரு எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைச் செயலாளர் திரு. ந. வாசுதேவன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத் துறைச் செயலாளர் திரு. வி. கனகராஜ், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநர் திரு. ஆர்.எஸ். கண்ணா, இ.ஆ.ப., மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநர் திரு. பா. அண்ணாமலை, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத் துறை இயக்குநர் திரு. தங்க கலியபெருமாள், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.**

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.